இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள். யூதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடையூறாய் இராதீர்கள். நானும் அனைத்திலும், அனைவருக்கும் உகந்தவனாய் இருக்கிறேன். நான் எனக்குப் பயன் தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன். நான் கிறிஸ்துவைப்போல் நடப்பதுபோன்று நீங்களும் என்னைப்போல் நடங்கள். ( 1 கொரி 10: 31- 11: 1

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 2024-ம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தி (சுருக்கம்)

## பாலைவனத்தின் மூலம் கடவுள் நம்மை விடுதலை வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார்

அன்பு சகோதர சகோதரிகளே.

கடவுள் தன்னை வெளிப்படுத்தும்போது, அவருடைய செய்தி எப்போதும் விடுதலையைப் பற்றியதாக இருக்கும். “நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர்” (விப.20:2) சீனாய் மலையில் மோசேவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையின் முதல் வார்த்தை இதுவே. அவற்றைக் கேட்டவர்கள் கடவுள் பேசிய விடுதலையைப் பற்றி அறிந்திருந்தனர். அவர்களின் அடிமைத்தனத்தின் சுமை அதிகமாக இருந்தது. பாலைநிலத்தில் அவர்களின விடுதலைக்கு ஒருவழியாக ‘பத்து கட்டளைகள்’ கிடைத்தது. கட்டளைகள் வழியாக கடவுள் தம் அன்பின் வலிமையை வடிவமைத்தார். விடுதலையின் அழைப்பு அவர்களுக்குத் தேவைப்பட்டது. அதற்கான பதில் அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கவில்லை. பாலைநிலத்தில் இருந்த மக்கள் இன்னும் எகிப்தை நினைத்து கடந்த காலத்தை நினைத்து, அடிக்கடி ஏங்குவதும், கடவுளுக்கும் மோசேவுக்கும் எதிராக முனுமுனுத்தது இன்றும்கூட நடக்கிறது. கடவுளின் மக்கள் கடந்தகால அடிமைத்தனத்தோடு ஒட்டிக்கொள்ளாமல் அதை விட்டுவிட அழைக்கப்படுகிறோம். நம்பிக்கையற்றவர்களாக அலைந்து இத்தருணங்களில் வாக்களிக்கப்பட்ட நிலம் நமது இலக்காகும்.

தவக்காலம அருளின் காலம். ஓசேயா இறைவாக்கினர் கூறுவதுபோல பாலைநிலமாக்கப்பட்ட நம் வாழ்வுக்கு மீண்டும் கடவுளின் அருளை மீட்டுத்தரும் காலம். அவரின் முதல் அன்புக்குரியவர் (ஓசேயா 2:16-17) நம் அடிமைத்தன்தை விட்டு விட்டு மரணத்திலிருந்து வாழ்வுக்கும் பாஸ்காவை அனுபவிக்கவும் கடவுள் தம் மக்களை வடிவமைக்க நமக்கு உதவுகிறார்.ஒரு மணமகனைப் போல கடவுள் நம்மை அவர் பக்கம் ஈர்த்து அன்பின் வார்த்தைகளை நம் காதுகளுக்குள் மெல்ல பேசுகிறார்.

அடிமைதத்தனத்திலிருந்து விடுதலைக்கான பயணம் ஒரு குறுகிய பயணம் அல்ல. நம்முடைய தவக்காலப் பயணம் இறுதியானதாக இருக்க வேண்டும் என்றால், முதல்நிலை, உண்மைநிலைக்கு நமது கண்கள் திறக்கப்பட வேண்டும். இன்று ஒடுக்கப்பட்ட எத்தனையோ சகோதர சகோதரிகளின் அழுகுரல் விண்ணகத்தை எட்டுகிறது. அந்த அழுகுரல் நம் காதுகளில் விழுகிறதா? அது நமக்குத் தொல்லையாக உள்ளதா? தொடக்கத்திலிருந்து ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும் நாம், நம் செயல்களால் நம் சகோதரத்துவத்தை




மறுத்து ஒருவர் மற்றவரிடம் இருந்து ஒதுங்கி வாழ்கிறோம்.

விடுதலைப் பயண நூலில் ஒரு குறிப்பிடத்தக்க செய்தி உள்ளது. அதுதான் ‘கடவுள் பார்க்கிறார், செயலாற்றுகிறார் மற்றும் விடுவிக்கிறார்’ என்பதாகும். இஸ்ரயேலர் இதைப் பொருட்படுத்தவில்லை. பாரவோன் அவர்களின் விண்ணகக் கனவுகளை முடக்கினதால், அவர்களின் ‘பார்வை’ மறைக்கப்பட்டது. இன்று நாம் கேட்க வேண்டியது, ‘நமக்கு ஒரு புது உலகம்’ வேண்டுமா? இல்லையா? பழையதைத் துறந்து முன்னோக்கிச் செல்லத் தயாராக உள்ளோமா?



எனது சக ஆயர்களின் சாட்சியங்களும், ஆறுதலல்களும் நம்பிக்கை அளிக்கின்றன.

இன்றைய எளியோரின் அழுக்குரலையும் நம்பிக்கையின்மையையும் விண்ணக் கடவுளிடம் கொண்டுசெல்ல வேண்டும். உலகளாவிய சகோரத்துவத்தில் அறிவியல், தொழில்நுட்பம், பண்பாடு மற்றும் நீதித்துறை மேம்பாடு, அனைவருக்கும் கண்ணியத்தை வழங்க வேண்டும். சமத்துவமின்மை, துன்புறுத்தல் இன்றும் மேலோங்கி உள்ளதை மறுப்பதற்கில்லை.

கடவுள் நம்மைக் குறித்து சோர்வடைவதில்லை. தவக்காலத்தைச் சிறந்த காலமாக வரவேற்போம். “நானே உன் கடவுளாகிய ஆண்டவர்; அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர்” (விப.20:2) என்று அவர் நினைவூட்டுகிறார். ஆம், தவக்காலம் மனமாற்றத்தின் காலம். விடுதலையின் காலம். தவக்காலத்தின் முதல் வார நற்செய்தியிலும் இயேசு தூய ஆவியாரால் பாலைநிலத்திற்கு இட்டுச்செல்லப்பட்டு, அங்கே போராடுகிறார். மனுவுருவானவர் நாற்பது நாள்கள் நம்மோடு நிற்கிறார். பாரவோனைப்போல் மக்களைப் பொருட்படுத்தாமல் இருந்ததைப்போல் கடவுள் ஒருபோதும இருந்ததில்லை. பாலைநில அனுபவம் நம்மை பாவத்தில் இருந்து எழுந்துவரவும், நமது வாழ்க்கையை மேம்படுத்தவும், அடிமை வாழ்வில் விழுந்துவிடாமல் தற்காகவும் சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றலை அளிக்கிறது.

“என் அன்பார்ந்த மகன் நீரே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” (மாற்கு 1:11) என்பதும், ‘என்னைத் தவிர வேறு தெய்வம் உனக்கு இருத்தல் ஆகாது ’ என்பதும் பொய் என்று அலகை கூறுகிறான். இத்தகைய பொய் போதனைகள் நம்மை கவர்ந்து இழுக்கின்றன. இத்தகைய பொய் நமது நம்பிக்கையின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கக் கூடும். அதே சமயம் சிலைகளை வழிபடுவோர் அச்சிலைகளைப் போலவே, ஊமைகளாகவும் குருடர்களாகவும், காது கேளாதவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். (திபா 115:4). மாறாக, ஏழைகளின உள்ளத்தோர் எப்பொழுதும் திறந்த உள்ளத்தோடும் தயார்நிலையிலும் உள்ளனர்.

தவக்காலம் என்பது ஒரு இடைநிறுத்தக் காலம். நல்ல சமாரியனைப்போல் இடையில் நின்று காயம்பட்ட சகோதரன் அல்லது சகோதரியிடம் நிற்கும் காலம். இதனால், தவக்காலத்தின் தூண்களான இறைவேண்டல், உண்ணாயோன்பு, மற்றும் தர்ம செயல்கள் இவற்றில் கவனம் செலுத்தி வேற்று தெய்வங்களை விடுத்து, நம்மைச் சிறைப்படுத்தியவற்றிலிருந்து விடுவித்து கொள்ள முற்படுவோம்.

மேலும், தவக்காலமானது சமூக வாழ்வுக்கு அழைக்கும் காலம். திருஅவையின் ஆயர் மன்றம் அக்காலத்தில் சமூகமாக முடிவெடுத்தலுக்கு முன்னுரிமை அளிக்கிறது. ஆகவே, இக்காலம் எந்தளவுக்கு நமது மனமாற்றத்திற்கும் மனிதநேயத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்போகிறது என்பது பற்றி சிந்திக்க வேண்டும். கோடைக் காலத்தில் நான் இளைஞர்களிடம் கூறியதைப்போல், “தொடர்ந்து தேடுங்கள், அபாயங்களை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். மூன்றாம் உலகப்போரும் நிகழக்கூடும்.” ஆகவே, புதியதொரு நம்பிக்கையை அளிக்கவல்ல திருப்புமுனையை நாம் காண வேண்டும். அடிமைத்தனத்திலிருந்து வந்த துணிவான மனமாறத்தைப்போல இத்தவக்காலம் அருளட்டும். நம்பிக்கை வாழ்வில் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வோம்.

*உரோமை புனித யோவான் லாத்தரன் ஆலயம். டிசம்பர் 3, 2023.*
*தவக்காலத்தின் முதல் ஞாயிறு*

# அர்ப்பணிக்கப்பட்ட துறவியர் உலக நாள்

இல்லறம் தவிர்த்து, இறையோடு மகிழ்ந்து, தனிமையில் நிலைத்து, தபத்தில் சிறந்து, துறவை தூய்மையாக போற்றியவர்கள் துறவிகள். துறவு என்பது ஆசையைத் தவிர்த்து அன்பை விதைத்து அன்போடு பயணிப்பதே. ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 2 ஆம் நாள் அதாவது இயேசு பிறந்து 40ஆம்



அருள்சகோதரிகளுடன் திருத்தந்தை பிரான்சிஸ்

நாள் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட நாளன்று அர்ப்பணிக்கப்பட்ட துறவிகளின் உலக நாளை திருஅவை சிறப்பிக்கின்றது. அதன்படி கடந்த பிப்ரவரி 2 வெள்ளிக்கிழமை 27ஆவது ஆண்டு அர்ப்பணிக்கப்பட்ட துறவியருக்கான உலக நாள் சிறப்பிக்கப்பட்டது.

இந்த நாளில் மெழுகுதிரிகள் ஆசீர்வதிக்கப் படுகின்றன. மெழுகுதிரிகள் தியாகத்தின் அடையாளம். தன்னையே உருக்கி உலகிற்கு ஒளி கொடுக்கும் திரிகள், குடும்பத்திற்காக சமூக முன்னேற்றத்திற்காக என்று தன்னையே அர்ப்பணித்து வாழும் மனிதர்களுக்கு அடையாளமாக கூறப்படு கின்றன. மேலும் தியாகத்தின் இலக்கணமாய் தன்னையும், தன் வாழ்வையும், இறைத் திருவுளத்திற்காக அர்ப்பணித்து, உலகின் ஒளியாகத் திகழும் இயேசுவையும் அடையாளப்படுத்துகின்றன. இயேசுவைப் பின்பற்றி அவர்பணி செய்ய தங்களையே அர்ப்பணித்திருக்கும் துறவிகளும், உலகின் ஒளியான இயேசுவின் ஒளியைப் பிரதி பலிக்கக்கூடியவர்களாக வாழவும், இந்த மெழுகுதிரியானது அர்ச்சிக்கப்பட்டு வழங்கப் படுகின்றது.

அர்ப்பணிக்கப்பட்ட துறவிகளின் மறைப் பணி வாழ்க்கையானது, திருஅவையின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்றும், இந்த சிறப்பானது, துறவற அழைத்தலைப் பெற்றவர்கள் மட்டுமன்றி முழு கிறிஸ்தவ சமூகத்திற்குமானது என்றும் திருத்தந்தை புனித 2ஆம் ஜான் பால் இந்நாளைக் குறித்து எடுத்துரைக்கின்றார். மேலும், “கிறிஸ்தவ அழைப்பின் உள்ளார்ந்த தன்மையை வெளிப்படுத்துவதாலும், முழு திருஅவையும் ஒன்றிணைவதற்கு மணமகனாம் இயேசுவுடன் இணைந்து அவரது பணிக்காக செயல்படுவதாலும், திருஅவையின் இதயமாக அர்ப்பணிக்கப்பட்ட துறவிகள் இருக்கின்றனர் என்றும் எடுத்துரைக்கின்றார்.

பாலைநிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன்; பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன் (எசா 43:19) என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் வழியாகக் கடவுள் நமது வாழ்வின் பாலைவனங்களுக்கு மத்தியில் புதிய பாதைகளைத் திறக்கிறார். அருள்பொழிவு செய்யப்பட்டவர்களாக, அர்ப்பணிக்கப்பட்ட துறவியராக வாக்குறுதியின் அடையாளமாக இருக்கவும், கடவுளின் புனித மக்களின் வரலாற்றில் அதை நிறைவேற்ற உதவவும் அழைக்கப் படுகின்றார்கள். ஆண்டவர் தன்னை இரக்கத்தின் கடவுளாக வெளிப்படுத்துவதுடன், அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டேன் என்று உறுதியளிக்கின்றார். அவர் எப்போதும் நம் அருகில் இருக்கின்றார். துயரங்களின்போது அடைக்கலமாகவும் நம்முடன் இருக்கின்றார். ஆகவே, அர்ப்பண வாழ்விற்கு அழைக்கப்பட்ட அனைவரும் கடவுளின் இந்த வாக்குறுதியை துயருறும் அவருடைய மக்களுக்கு வெளிப்படுத்த அழைக்கப்படுகின்றார்கள்.

# அமலோற்பவ அன்னை பங்கில் சிறப்பு பொங்கல் கொண்டாட்டம்

## பொங்கல் ஒரு முதற்கனி விழா

ஜொகூர் பாரு: இங்குள்ள அமலோற்பவ அன்னை தேவாலயத்தின், தமிழ் மொழி கலாச்சாரம் மற்றும் கலை பேரவை, கடந்த 21 ஜனவரி 2024 அன்று ஒற்றுமை பொங்கல் நிகழ்ச்சிக்கு செய்தது. தேவாலய வளாகத்தில் வண்ணமயமான அலங்காரங்கள், ரங்கோலிகள் மற்றும் பண்டிகை விளக்குகளுடன் பொங்கல் கொண்டாட்டம் தொடங்கியநு.

இக்கொண்டாட்டத்திற்கு அருள்பணியாளர்கள் எட்வர்ட் ராயப்பன், அருட்தந்தை சிரில் மன்னாயகம் இருவரும் தலைமையேற்று சிறப்பித்தனர். பொங்கல் விழாவானது இயற்கைக்கும் இறைவனுக்கும் நன்றி செலுத்துவதில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அன்றைய சிறப்புத்



தருப்பலியில் ஆண்டு முழுவதும் பெறப்பட்ட ஏராளமான நன்மைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் நன்றி நவிலப்பட்டது.

பங்கு உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள், இந்தக் விழாவில் மகிழச்சியுடனும் ஒற்றுமையுடனும் பங்கேற்றனர். இது ஒற்றுமை மற்றும் சமூக உணர்வைக் குறிக்கிறது. பானை திறந்த நெருப்பில் வைக்கப்பட்டு, பொங்கல் சமைக்கும்போது, அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் ஒற்றுமையாக பொங்கல் வைத்தனர்.

திருப்பலிக்குப் பிறகு, அனைவருக்கும் சுவையான பொங்கலும் சைவ பாரம்பரிய உணவுகளும் பரிமாறப்பட்டது.

வழக்கமாக, பண்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுகள் இல்லாமல் தேவாலயத்தில் பொங்கல் கொண்டாட்டங்கள் நிறைவடையாது. நாட்டுப்புற நடனங்கள், பாரம்பரிய இசை, நாடகம், பொங்கல் விளக்கம், மெட்லி பாடல்கள், கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்த தேவாலயத்தின் இளைஞர் குழு பொறுப்பேற்று நிறைவு செய்தது. இவற்றோடு, குழந்தைகள் கலை, கைவினைப் பட்டறைகளிலும், அழகான பொங்கல் சார்ந்த அலங்காரங்கள் மற்றும் கைவினைப்பொருட்களை உருவாக்கப் போட்டிகள் ஏற்பாடுச் செய்யப்பட்டன.



அன்று பங்குத்தந்தை எட்வர்ட் ராயப்பன் அவர்கள் ஏற்பாட்டுக் குழுவினருக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொங்கல் விழா ஒருங்கிணைப்பாளர்; திரு. தோமஸ் மரியசூசை அவர்கள் பொங்கல் விழாவை சிறப்பாக நடக்க உதவிய சிறப்பு பணிக்குழுவிற்கும் பங்குத்தந்தைக்கும் அருள்தந்தை சிரில் அவர்களுக்கும் ஏற்பாட்டுக்குழு சார்பில் தனது நன்றியை தெரிவித்திருந்தார்.

*-தோமஸ் மரியசூசை & எட்ரியன் லோகநாதன்*

# அவரது திருவுளத்தை ஏற்பதே சிறந்த சீடத்துவம்!

ஆண்டின் பொதுக்கால 6ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். படைப்பு எல்லாம் நல்லதென கண்ட இறைவன், மனிதர்கள் யாவரையும் தன் சாயலிலே படைத்தார் எனும் செய்தி நம்மை கவர்கிறது. முதல் வாசகத்திலும் நற்செய்தியிலும் தொழுநோயாளி மையப்படுத்தப்படுகிறார். லேவியர் நூலில், குருக்களுக்கு ஒரு முக்கியப்பணி தருகிறார் கடவுள். ஆம், அந்நாள்களில் ஒருவர் உடலில் தோல்மீது தொழுநோய் போன்று, ஏதேனும் தடிப்போ, சொறி சிரங்கோ, வெண் படலமோ தோன்ற, அது தொழுநோயென ஐயமுற்றால், அவர் குருவாகிய ஆரோனிடம் அல்லது குருக்களாகிய அவர் புதல்வரில் ஒருவரிடம் கொண்டுவரப்பட வேண்டும். அவர் தொழுநோயாளி. அவர் அவர் தீட்டுள்ளவர், எனக் குரு அறிவிப்பார் என்பது கட்டளையாகும். தொழுநோய் கண்ட நோயாளி அன்று முதல் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவார். மனைவி மக்கள் கூட அவரை அண்ட இயலாது.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் அடிகளின் மிகவும் துணிச்சலான போதனையைக் கேட்கிறோம். நம்பிக்கை வாழ்வில் அவரை முனமாதிரியாகக் கொண்டு வாழ அழைக்கிறார். நற்செய்தியிலோ, தொழுநோயாளர் இயேசுவிடம், நீர் விரும்பினால் எனது நோயை குணமாக்கும் என்று கூற, இயேசுவும் ‘விரும்புகிறேன், உமது நோய் நீங்குக’ என்று கூறி அவர் தொழுநோயை குணமாக்குவதை காண்கின்றோம்.
அந்தத் தொழுநோயாளர் இறைவனின்



விருப்பத்திற்கு முதலிடம் கொடுப்பதே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

இறைமகன் பல நோயாளிகளை அவர்கள் நம்பிக்கையின் பொருட்டு குணமாக்குவார். ஆனால். இந்நிகழ்வு அவையெல்லாவற்றிலும் சற்றே வித்தியாசமானது. எல்லாரோலும் புறக்கணிக்கப்பட்ட ஒரு நபர், இறைமகனே,குணமாக்கும் எனக் கேட்காமல், நீர் விரும்பினால் குணமாக்குமென்பது நம் மனதைத் தொடுகின்றது.

இறைவனின் விருப்பத்திற்கு அவர் கொடுக்கும் முக்கியத்துவம் நிச்சயம் நம் வாழ்வில் பின்பற்றவேண்டிய காரியம். எந்த ஒன்றிலும் நாம் நினைத்ததை இறைவன் தர வேண்டுமென விரும்புவோம். அதற்கு மாறாக, நடந்துவிட்டால் இறை நம்பிக்கையை இழந்து விடுவோம். இறைமகன், கெத்சமனி தோட்டத்தில், ‘தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக்கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும், ஆனாலும். என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும் (லூக்.22:41-42) என்று கூறுகிறார். இறைவனின் விருப்பம், இறைத்திருவுளமே அங்கு நிறைவேறுவதை நாம் உணர முடிகிறது. நாமும் இறைவனின் விருப்பத்திற்கு அன்னை மரியைப் போன்று நம்மை அர்ப்பணிப்போம். அவர் விருப்பம் எதுவோ, அவரது திருவுளம் எதுவோ அதை ஏற்று வாழ்வோம்.

இறைவன் கொடுப்பது எதுவாக இருந்தாலும் அது நல்லதாகவே அமையும். இறைவன் கொடுக்க நினைப்பதை யாராலும் தடுக்க முடியாது: இறைவன் தடுக்க நினைப்பதை யாராலும்; கொடுக்க இயலாது.

*-ஆர்.கே.*

**ஆண்டீன் பொதுக்காலத்தின் 6-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | லேவி *13: 1-2, 44-46* |
| திரு.பாடல் | *32: 1-2. 5. 11* |
| 2-ம் வாசகம் | *1* கொரி *10: 31- 11: 1* |
| நற்செய்தி | மாற்கு *1: 40-45* |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**